©
GOVERNMENT OF TAMIL NADU
2015

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Re. 0.80 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**EXTRAORDINARY** PUBLISHED BY AUTHORITY

No. 105] CHENNAI, FRIDAY, MAY 8, 2015
Chithirai 25, Manmadha, Thiruvalluvar Aandu–2046

## Part III—Section 1(b)

**Service Rules including Ad hoc Rules, Regulations, etc., issued by Secretariat Departments.**

## NOTIFICATIONS BY GOVERNMENT

### தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை

**பொதுப்பணிகள்–தமிழ்நாடு பொதுப்பணி–தமிழ் வளர்ச்சி இயக்ககம்–உதவி இயக்குநர் தற்காலிகப் பதவி–அதற்குரிய விதிகள்–திருத்தங்கள்.**

*[அரசாணை (நிலை) எண் 102, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ2.1)த் துறை, 8 மே 2015, சித்திரை 25, மன்மத, திருவள்ளுவர் ஆண்டு–2046.]*

**No. SRO B-35(a)/2015.**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 309ஆம் பிரிவின் வரம்பு நிபந்தனையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறையில் 15–09–1987ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்-III—பிரிவு 1(b), 429–430ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட எஸ்.ஆர்.ஓ. 309–பி, என்ற எண்ணுள்ள அறிவிக்கையில் வெளியிடப்பட்டுள்ள விதிகளில், பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

இதன் மூலம் செய்யப்பட்டுள்ள திருத்தங்கள் ஆணை வெளியிடப்படும் நாளன்று செயலுக்கு வரும்.

### திருத்தங்கள்

மேற்சொன்ன விதிகளில்,–

(1) விதி எண் 3–க்குப் பதிலாக, பின்வரும் விதியைக் கொள்ள வேண்டும். அதாவது:–

3. **நியமனம்:** இப்பதவிக்கான நியமனமானது,

(i) தமிழ் வளர்ச்சி இயக்ககத்திலுள்ள கண்காணிப்பாளர் பதவியில் உள்ளவர்களிடையேயிருந்து பணிமாற்றத்தின் மூலம் மற்றும்

(ii) நேரடி நியமனம்

மற்றும்

(iii) பிற பணியாளர் தொகுதியிலிருந்து பணிமாற்றத்தின் மூலம் (முன்னுரிமை–பள்ளிக்கல்வித் துறை, கல்லூரிக்கல்வித் துறை) செய்யப்பட வேண்டும்.

இருப்பினும் மேற்படி நியமனங்கள் 1:1:1 என்ற விகிதாச்சாரத்தின்படி அமைய வேண்டும்.

**2.** விதி எண் 4—ல் நடைமுறையில் உள்ள அட்டவணையில் கட்டம் 1 (நியமனமுறை) மற்றும் கட்டம் 2 (தகுதி)—ல் கீழ்க்கண்ட பதிவுகளை புதிதாகச் சேர்க்கலாம்:

| | |
|---|---|
| **3.** பிற பணியாளர் தொகுதியிலிருந்து பணிமாற்றத்தின் மூலம் (முன்னுரிமை— பள்ளிக் கல்வித் துறை, கல்லூரிக் கல்வித் துறை) | தமிழில் முதுகலைப் பட்டம் அல்லது தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கியத்தில் முதுகலைப் பட்டம். |

**மூ. இராசாராம்,**
*அரசு செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.